செ.வெ.எண்: 161

செய்திக்குறிப்பு

நாள்: 21.02.2011

மாணவ மாணவியருக்கு இலவசமாகக் கலைப் பயிற்சியளிக்கும் திட்டம் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் தொடங்கி வைக்கிறார்.

5 வயதிலிருந்து 16 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியரின் கலைத் திறமைகளை மேம்படுத்திட இலவசமாக கலைப் பயிற்சியளிக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்த உள்ளது. கலை பண்பாட்டுத் துறை சார்பில் இத்திட்டம் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

1979 ஆம் ஆண்டு முதல் சென்னை அரசினர் தோட்டம் இராஜாஜி மண்டபம் அருகில் இருந்த காந்தி மண்டபம் கட்டிடத்தில், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் செயல்பட்டு வந்தது. இவ்விடத்தில் பரத நாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, மிருதங்கம், கீபோர்டு, வீணை, கராத்தே, ஜிம்னாஸ்டிக்ஸ், சிலம்பாட்டம் போன்ற 16 வகைக் கலைகளில் 5–16 வயது குழந்தைகளுக்கு இலவசமாகப் பயிற்சியளிக்கப்பட்டு வந்தது. 2005 ஆம் ஆண்டு அக்கட்டிடம் சேதமடைந்ததால், சென்னை அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வந்தது.

இம்மன்றம் தொடர்ந்து செயல்பட கட்டிடம் இல்லாதிருந்த நிலையில், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான, மயிலாப்பூர் லஸ் அவென்யூவில் உள்ள (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) சிசு விஹார் எனும் பள்ளிக் கட்டிடம் மற்றும் அதன் வளாகத்தை சென்னை மாநகராட்சி அளித்து உதவியது.

சென்னை மாநகரக் குழந்தைகள் இலவசமாகக் கலைப் பயிற்சி பெற வேண்டும் எனும் உயரிய நோக்கத்திற்காக மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளனர். இவ்விடத்தில் திங்கள், வியாழன் ஆகிய இருநாட்களில் பரத நாட்டியம், குரலிசை, கீபோர்டு, மிருதங்கம், தபேலா, சிலம்பாட்டம் ஆகிய கலைகளிலும், செவ்வாய், வெள்ளி ஆகிய இரு நாட்களில் நாட்டுப்புற நடனம், வீணை , டிரம்ஸ், நாடகம், ஜிம்னாஸ்டிக்ஸ் ஆகிய கலைகளிலும், புதன், சனி ஆகிய இரு நாட்களில் ஓவியம், கணினி, தையல், யோகா, கராத்தே ஆகிய கலைகளிலும் 5–16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணி வரை இலவசமாகக் கலைப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இம்மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கலைப் பயிற்சி பெறும் குழந்தைகள், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் நடத்தும் தேசிய அளவிலான, மாநில அளவிலான திட்டங்களில் இலவசமாகக் கலந்து கொள்ளவும் வாய்ப்பு பெறுவர்.

22.02.2011 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் கலைப் பயிற்சிகளை தொடங்கி வைக்க உள்ளார்கள். 2010 ஆம் ஆண்டு சவகர் சிறுவர் மன்றத்தால் நடத்தப்பட்ட சென்னை மாவட்டக் கலைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அவ்வமயம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்க உள்ளார்கள். கலை பண்பாட்டுத்துறை ஆணையர் திரு. ப.அ. மணி, இ.வ.ப., அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்க உள்ளார்கள். சென்னை மாநகராட்சியின் 10வது மண்டலக் குழுத் தலைவர் திரு. மு. ஜெயராமன் அவர்களும், 143வது வட்ட மாமன்ற உறுப்பினர் திரு. சி. குப்பன் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

21.2.11.
ஆணையருக்காக.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

21.2.2011

2/2